உ

சிவமயம்




யாழ்ப்பாணம் - அரியாலையூர்.

திருமதி இராசம்மா - பாலசுப்பிரமணியம்

அவர்களின்

# நினைவு மலர்

21 - 05 - 2006



உ

சிவமயம்.



யாழ்ப்பாணம் - அரியாலையூரில்

வாழ்ந்து மறைந்த

அமரர்

# திருமதி இராசம்மா – பாலசுப்பிரமணியம்

அவர்களின்

நினைவில் மலர்ந்த

# நினைவு மலர்

21-05-2006

# சமர்ப்பணம்

பாரினிலே பிறந்து

பாசத்துடனும் நேசத்துடனும் வாழ்ந்து

எம்மிருவரையும் பெற்று

பொறுப்புடன் வளர்த்து

கோபுரம்போல் எங்களை உயர்த்தி

"தாயிற் சிறந்ததோர் கோயில் இல்லை"

என்று வாழ்ந்து தெய்வமாகிவிட்ட

எம் அன்னையின் பாத கமலங்களில்

இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

- பிள்ளைகள்.

உ

சிவமயம்



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28-04.1932 | அமரர் | 21.04.2006 |

# திருமதி இராசம்மா பாலசுப்பிரமணியம்

## திதி நிர்ணய வெண்பா

சீருயர் வியவருடம் செப்புதமிழ் சித்திரையில்
பார்நேர் அட்டமிப் பேர்திதியில் - சீரார்
இராசம்மா என்பார் இணைந்தார் இறைபாதம்
பாரின்கண் வாழ்வைத் துறந்து.

[001416 287 6388]

உ

சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

சலம்பூ வொடு தூபமறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கினுமுன் னைமறந் தறியேன்
உன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருள்வாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாயசிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்கு ஆக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம்பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உ

# திருமதி இராசம்மா – பாலசுப்பிரமணியம்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத்தின் வடபால் இலங்குமுயர் யாழகத்தில்
சீருயர் நீர்வளம் சிறப்புயர் பயிர்வளம்
பேறுயர் கல்விப் பெருவளம் இலங்கிடும்
பெருமை சேரூராய் புகழுடன் மிளிர்வதே
கனிவுயர் கச்சேரி எனுமுயர் நல்லூர்
இத்தனை சிறப்பும் இலங்கிடும் ஊர்தனில்
உத்தம மனிதராய் வாழ்ந்தே மறைந்த
சீருயர் தியாக ராஜாவென் பவர்க்கும்
சிறப்புயர் நல்லாள் செல்லம் மாவிற்கும்
ஆயி ரத்து தொள்ளா யிரத்து
முப்பத்தி ரண்டா மாண்டு சித்திரை
முழுநிறை இருபத்தி யெட்டாந் தேதியில்
இனியநல் மகவாய் இம்மண் தன்னில்
இனிதுடன் மலர்ந்தார் இராசம் மாவென்பார்
பிறந்தார் வளர்ந்தார் பேறுகள் பெற்றார்
பாரின் கண்ணே புகழுடன் மிளிர்ந்தார்
நல்லுய ராளராய் நானிலந் தன்னில்
நலமுடன் மிளிர்ந்த நிறைவுயர் இராசம்மா
விருப்புயர் கல்வி தன்னை நல்லூர்
விக்னேஸ் வராநல் வித்தியா லயத்தில்
விருப்புடன் கற்று வளமது பெற்றார்
வாழ்வில் வளமது பெற்றநல் இராசம்மா
வனப்புயர் இல்லற வாழ்வின் துணையாய்
நல்லரி யாலையூர் மண்ணில் வாழ்ந்த
சீருயர் சதாசிவம் எனுமுய ராளரும்
சிறப்புயர் நாகம்மா எனுமுய ராளரும்
பெற்ற பேறுயர் மகனே யாகிய
கச்சேரி ஆராட்சி யாளரே யாகிய
பால சுப்பிர மணியம் என்பரை
மகிழ்வுட னேற்றே மாட்சிமை பெற்றார்

இல்லற வாழ்வில் இனிதுடன் திகழ்ந்த
இனிய நல்லாளர் பாலசுப்ர மணியமும்
இதமுயர் இராசம்மா எனுமுய ராளரும்
இணைந்த இல்லற வாழ்வின் பயனாய்
இலண்டன் மண்ணில் வாழும் அன்புயர்
விஜய லட்சுமி என்பவர் தனையும்
கனடா மண்ணில் வாழும் அறிவுயர்
நற்தன லட்சுமி என்பவர் தனையும்
மக்களாய் பெற்றே மகிழ்வது அடைந்தனர்
விஜய லட்சுமி தன்னை மணந்த
ஹப்பி ரெக்ஸ் உரிமை யாளராய்
இலண்டன் மண்ணில் இதமுடன் வாழும்
சீருயர் சோதி ராசாவென் பவரும்
கனடா தன்னில் வாழும் அறிவுயர்
நற்தன பால சிங்கமென் பவரும்
காலஞ் சென்ற இராசம் மாவின்
கனிவுயர் நல்மரு மக்களே ஆவர்
நற்தன பால சிங்கமென் பவரும்
தவமுயர் நற்தன லட்சுமி என்பவரும்
பெற்ற பேறுயர் தஜிசன் என்பவர்
காலஞ் சென்ற இராசம் மாவின்
பேறுயர் பேர மகனே ஆவார்
இம்மண் தன்னில் இதமுடன் வாழ்ந்து
இறையடி பற்றியே சென்ற அன்புயர்
விசுவ லிங்கம் எனுமுய ராளர்
காலஞ் சென்ற இராசம் மாவின்
கூடப் பிறந்த சோதரர் ஆவார்
இராசம் மாவின் கணவரே யாகிய
நல்லுயர் பால சுப்பிர மணியத்தின்
கூடப் பிறந்த வர்களே ஆகிய
மதிநிறை நல்மகா தேவா என்பரும்
காலஞ் சென்ற வர்களே ஆகிய
தர்ம லிங்கமும் நற்சரஸ் வதியும்
பேறுயர் பாலாம் பிகையென் பவரும்
காலஞ் சென்ற இராசம் மாவின்
மதிநிறை மைத்துனர் மைத்துனி மார்களே

| | | | |
|---|---|---|---|
| இம்மண் | தன்னில் | வாழ்ந்தே | மறைந்த |
| நல்லுயர் | நடராசா | எனுமுய | ராளரும் |
| விஸ்வ | லிங்கம் | அவர்தம் | மனையாள் |
| விருப்புயர் | நவமணி | தேவியென் | பவரும் |
| காலஞ் | சென்ற | இராசம் | மாவின் |
| மதிநிறை | மைத்துனன் | மைத்துனி | மார்களே |
| நடராசா | தம்மின் | மனையா | ளாகிய |
| சீருயர் | சறோஜினி | எனுமுய | ராளரும் |
| நல்மகா | தேவா | தம்மின் | மனையாள் |
| நல்லுயர் | உமா | ராணியென் | பவரும் |
| தர்ம | லிங்கம் | என்பரை | மணந்த |
| காலஞ் | சென்ற | அன்னபூரணி | அம்மாவும் |
| சரஸ்வதி | தம்மின் | கணவரே | யாகிய |
| காலஞ் | சென்ற | தம்பித் | துரையும் |
| பாலாம் | பிகையை | மணமது | புரிந்த |
| சீருயர் | சோம | சேகரம் | என்பவரும் |
| காலஞ் | சென்ற | இராசம் | மாவின் |
| பேறுயர் | சகலன் | சகலி | மார்களே |
| விருப்புயர் | விஸ்வ | லிங்கமென் | பவரும் |
| நற்தவ | மணிதேவி | எனுமுய | ராளரும் |
| பெற்ற | பேறுயர் | பிள்ளைக | ளாகிய |
| சுமதி | சுதாகர் | சுகந்தி | யுடனே |
| சீருயர் | சுபோதினி | எனுமுய | ராளரும் |
| நல்நட | ராசாவும் | சறோஜினி | என்பரும் |
| பெற்ற | அன்புயர் | மக்களே | யாகிய |
| ஜமுனா | மஞ்சன் | நற்தர | னுடனே |
| விருப்புயர் | வர்மன் | எனுமுய | ராளரும் |
| காலஞ் | சென்ற | இராசம் | மாவின் |
| மதிநிறை | நல்மரு | மக்களே | ஆவர் |
| இத்தனை | யோபல | சுற்றம் | இருந்தும் |
| இறைவன் | விதித்த | விதியின் | பயனாய் |
| உத்தம | மாது | இராசம்மா | வென்பார் |
| இத்தரை | யாளும் | இறைவன் | பாதம் |
| பற்றியே | சென்றார் | பார்தனைத் | துறந்து. |

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கவியாக்கம் : அரியாலையூர் வே. ஐ. குமரதாசன்

உ



தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைப்போந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

நிலமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவெல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
வணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனேன்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச்செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணை வேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத தொடரும் பிரம ராஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் செல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செயய்ான் பூரான்
கடிவிட விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் கும்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை பட்தொடை வாழை
கடுசன் படுசன் கைத்ததாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லலாதோட நீயெனக்கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைனனவருமெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே கைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடம்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன்குடி வாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தம் பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைன ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய்
பாலன் றேவ ராயன் பகர்ந்ததை

காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்த தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

முற்றிற்று.

## அறிந்து கொள்ளுங்கள்!

- இலங்கையின் பிரதான இயற்கைத் துறைமுகம்
  **திருகோணமலை**
- இலங்கையின் தலைசிறந்த விஞ்ஞானி
  **ஆதர் சி கிளார்க்**
- உலகில் மிகச் சிறிய கண்டம்
  **அவுஸ்திரேலியா**
- உலகில் அதிகமாக தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடு
  **தென் ஆபிரிக்கா**
- இலங்கையின் மிகப் பெரிய காடு
  **சிங்கராசா வனம்**
- இலங்கையில் பறவைகளின் சரணாலயம் அமைந்துள்ள இடம்
  **குமண**
- புவியின் பிரதான துணைக்கோள்
  **சந்திரன்**
- ஒளி வளையமுடைய கோள்
  **சனி**
- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
  **சுவிற்சலாந்தின் ஜெனீவா**
- நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர்
  **எரிக் சொல்ஹெய்ம்**
- இலங்கையின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர்
  **பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன்**
- இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் பெரிய அமைப்பு
  **மாகாணசபை**
- சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
  **பிலிப்பைன்ஸ் - மணிலா**
- கண்ணி வெடிகளை முதன்முதல் முற்றிலும் தடைசெய்த நாடு
  **சுவிற்சலாந்து**

- இலங்கையின் தேசிய விளையாட்டு
  **எல்லே**
- ஐந்தாம் சமயகுரவர் என அழைக்கப்பட்டவர்
  **ஆறுமுகநாவலர்**
- 2011-ம் ஆண்டு உலக கிண்ண கிரிக்கட் போட்டி நடைபெறும் நாடு
  **தென் ஆசிய நாடுகளில்**
- அரச ஊழியர்களுக்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதித் திட்டம்
  **அக்றஹாரா**
- விஞ்ஞானிகளின் தேசம் என்று அழைக்கப்படும் நாடு
  **இங்கிலாந்து**
- இலங்கையின் தற்போதய வறுமை ஒழிப்புத் திட்டம்
  **சமுர்த்தி**
- அரசின் நிர்வாக ரீதியான செய்திகளைத் தாங்கி வெளிவரும் அதிகாரபூர்வாமான ஏடு
  **வர்த்தமானி**
- தமிழ்மொழியில் முதலில் வெளிவந்த பத்திரிகை,
  **உதயதாரகை**
- இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை
  **225**
- உலகில் ஆகக்கூடிய பதிப்புரிமை பெற்ற ஒரேயொரு புத்தகம்
  **கின்னஸ்**
- இலங்கை சனநாய்க சோசலிசக் குடியரசின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி
  **ஜே. ஆர். ஜெயவர்த்தனா**
- இலங்கையில் பெரிய தீவு
  **நெடுந்தீவு**
- உலகிலே குடிசனத்தொகை மிகவும் கூடிய நாடு
  **சீனா**
- இலங்கையின் முதலாவது பிரதமர்
  **டி. எஸ். சேனநாயக்கா**

## சர்வதேச முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| ஜனவரி - 12 | சர்வதேச இளைஞர் தினம் |
| மார்ச் - 8 | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் - 22 | சர்வதேச குடிநீர் தினம் |
| ஏப்ரல் - 7 | சர்வதேச சுகாதார தினம் |
| மே - 1 | சர்வதேச தொழிலாளர் தினம் |
| யூன் - 5 | சர்வதேச சுற்றுச்சூழல் தினம் |
| செப்ரெம்பர் - 8 | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| ஒக்ரோபர் - 1 | சர்வதேச சிறுவர் தினம் |
| ஒக்ரோபர் - 6 | சர்வதேச ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் - 9 | சர்வதேச அஞ்சல் தினம் |
| ஒக்ரோபர் - 15 | வெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்ரோபர் - 17 | சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் |
| நவம்பர் - 20 | சர்வதேச சிறுவர் உரிமை தினம் |
| டிசம்பர் - 1 | சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் - 10 | சர்வதேச மனித உரிமை தினம் |

## சர்வதேச குறியீடுகள்

| | | |
|---|---|---|
| வெண்புறா | - | அமைதி, சமாதானம் |
| ஒலிவ் இலை | - | சமாதானம் |
| வெள்ளைக் கொடி | - | சோகம் |
| மஞ்சள் கொடி | - | தொற்றுநோய் |
| கறுப்புக் கொடி | - | எதிர்ப்பு |
| சிவப்புக் கொடி | - | ஆபத்து, அபாயம், புரட்சி |
| செஞ்சிலுவை | - | மருத்துவ உதவி |

# மனித உடல் பற்றிய தகவல்கள்

| | |
|---|---|
| மனிதனின் சராசரி நாடித்துடிப்பு | நிமிடத்திற்கு 72 தடவைகள் |
| சராசரி வெப்பநிலை | 98.4°F, 36.8°C |
| மிக நீண்ட எலும்பு | தொடை எலும்பு |
| மிகச் சிறிய எலும்பு | காதிலுள்ள எலும்பு 3 mm |
| எலும்புகள் அதிகமுள்ள பகுதி | கைகள் |
| எலும்புகளின் மொத்த எண்ணிக்கை | 207 |
| விலா எலும்புகளின் எண்ணிக்கை | 24 |
| மிக வன்மையான பகுதி | பல்மிளிரி |
| மிகப் பெரிய உறுப்பு | கல்லீரல் |
| மிகப் பெரிய சுரப்பி | ஈரல் |
| மிகச் சிறிய சுரப்பி | தைரொய்ட் |
| மிகப் பெரிய அங்கம் | தோல் |
| உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி | நகம், மயிர் |
| முதலில் இறக்கும் பகுதி | மூளையின் கலங்கள் |
| உயிரணுவில் உள்ள நிறமூர்த்தங்கள் | 23 கோடி |
| குருதி வகைகள் | A, B, AB, O, பொதுவாங்கி - AB<br>பொதுவழங்கி - O |
| நாக்கில் உள்ள சுவை நரம்புகள் | 1000 |
| மிக வலிமையான தசைப்பகுதி | நாக்கு |
| எலும்புகளின் துணையின்றி அசையும் தசை | நாக்கு |
| மிகப் பெரிய தசை | இதயத் தசை |
| மூட்டுக்களின் எண்ணிக்கை | 230 |
| பிறப்பிற்கு பின்னர் வளர்ச்சியடையாத பகுதி | கருவிழிப்படலம் |
| இரத்தம் செல்லாத பகுதி | கருவிழி |
| முதலில் உறங்கும் உறுப்பு | கண்கள் |
| மிகத் தூய்மையான இரத்தம் உள்ள பகுதி | சிறுநீரகச் சிறை |
| தசைகளின் மொத்த எண்ணிக்கை | 639 |
| நரம்புகளின் மொத்த எண்ணிக்கை | 7200 |
| மிகப் பெரிய இணைப்பு | முழங்கால் |
| 8 மில்லியன் செல்களால் உருவாக்கப்பட்ட பகுதி | மூளை |
| சிந்தனை வேகம் | மணிக்கு 270 km |

# இலங்கையின் வரலாறு

⇨ 1505 - போத்துக்கேயர் வருகை.
⇨ 1658 - ஒல்லாந்தர் வருகை.
⇨ 1796 - ஆங்கிலேயர் வருகை.
⇨ 1802 - முடிக்குரிய குடியேற்ற நாடாகியது.
⇨ 1815 - கண்டி யுத்தம் நடைபெற்றது. கடைசியாக கண்டியை ஆண்ட மன்னன் ஸ்ரீ விக்கிரமஜசிங்கன்.
⇨ 1833 - கோல்புறூக் யாப்பு உருவாகியது.
⇨ 1844 - பொலிஸ் சேவை ஆரம்பம்.
⇨ 1871 - முதல் குடிசனக் கணக்கெடுப்பு ஆரம்பமானது.
⇨ 1925 - வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
(இது 1946ல் இலங்கை வானொலி எனவும், 1967ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனவும் அழைக்கப்பட்டது)
⇨ 1939 - இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
⇨ 1940 - சோல்பரி அரசியல் யாப்பு உருவானது.
⇨ 1947 - இலங்கையில் முதலாவது மௌன திரைப்படம் "ராஜகிரிய விக்கிரமய" திரையிடப்பட்டது.
⇨ 1948 - சுதந்திரம் கிடைத்தது. (04-02-1948)
⇨ 1949 - இராணுவம் உருவாக்கப்பட்டது.
⇨ 1950 - கடற்படை உருவாக்கப்பட்டது.
⇨ 1950 - வாளேந்திய சிங்கக்கொடி தேசியக்கொடியாக அங்கீகரிக்கப்பட்டது.
⇨ 1950 - இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டது.
⇨ 1955 - இலங்கை ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெற்றது.
⇨ 1956 - தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
⇨ 1961 - மக்கள் வங்கி உருவானது.
⇨ 1972 - இலங்கை குடியரசானது. (22-05-1972)
⇨ 1972 - தேசிய அடையாள அட்டை அறிமுகமானது.
⇨ 1978 - தொலைக்காட்சி சேவை ஆரம்பமானது.
(இது 1982ல் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியது)
⇨ 1979 - பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
⇨ 1987 - இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது.
⇨ 1996 - இலங்கை கிரிக்கெட் அணி உலக கிண்ணத்தைச் சுவீகரித்தது.
⇨ 1998 - பொருட்கள் சேவை வரி *(GST)* அறிமுகமானது.

## உலகம் உங்களை விரும்ப.....

- பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்க தவறாதீர்கள்
- தகுதி இருந்தாலும், இல்லாவிட்டாலும் பாராட்டுதலை தவிர்க்காதீர்கள்.
- உண்மையானாலும், பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்.
- முடிந்தாலும், முடியாவிட்டாலும் உதவமாட்டேன் எனச் சொல்லாதீர்கள்.
- விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வாய்நிறைய எவரையும் வரவேற்றுக்கொள்ளுங்கள்.
- பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரியுங்கள்.
- அரைகுறை நண்பரானாலும், அப்போதுதான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக்கொள்ளுங்கள்.
- குற்றமென்றாலும், குறையென்றாலும் அதைப் பெரிதுபடுத்தாதீர்கள்.

## பொன்மொழிகள்

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | - | இன்பம், துன்பம் |
| வந்தாலும் போகாதது இரண்டு | - | புகழ், பழி |
| போனாலும் வராதது இரண்டு | - | மானம், உயிர் |
| தானாக வருவது இரண்டு | - | இளமை, மூப்பு |
| நம்முடன் வருவது இரண்டு | - | பாவம், புண்ணயம் |
| அடக்க முடியாதது இரண்டு | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | - | பசி, தாகம் |
| அழிவைத் தருவது இரண்டு | - | பொறாமை, கோபம் |
| எல்லோர்க்கும் சமமானது இரண்டு | - | பிறப்பு, இறப்பு |

## உங்கள் சிந்தனைக்கு....

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - | சமயோசிதபுத்தி |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | - | பொறாமை |
| நம்பககூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிகப் பேச்சு |
| செய்யக்கூடாதது | - | தவறுகள் |
| செய்யவேண்டியது | - | உதவி |
| விலக்கவேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | - | வாய்ப்பு |

## சிந்தனைக்கு சில வரிகள்..........

- ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாயினும் எதிர்வாதம் செய்யாதீர்கள்.
- நீயே உனக்கு நண்பனும் பகைவனும்.
- கவலைகள் உன்னில் வாழலாம். கவலைக்குள் நீ வாழாதே.
- அன்னை என்பவள் அன்பின் பிறப்பிடம், அவளே கருணையின் முழு உருவம்.
- நாட்டை ஆள்பவனைவிட தன் நாக்கை அடக்குபவனே பெரியவன்.
- பணமற்றவன் ஏழையல்ல, ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.
- செய் அல்லது செத்துமடி.
- அன்பினால் ஊக்கம் பெற்று அறிவினால் நடத்தப்படுவதே வாழ்க்கையாகும்.
- எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள் ஏனெனில் உங்கள் வாழ்க்கையில் மீதமுள்ள காலம் அதுதான்.



# நன்றி நவில்கின்றோம்

கடந்த 21-04-2006ல் இறைநிழல் சென்றடைந்த
எங்கள் குடும்ப ஒளிவிளக்கு
திருமதி இராசம்மா - பாலசுப்பிரமணியம் அவர்கள்

- இறைபதமடைந்த செய்திகேட்டு உடனே வந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும்,
- இறுதிச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டோர்க்கும்,
- இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள முடியாமல் தமது அனுதாபங்களை தொலைபேசி, தொலைநகல் மூலமாகத் தெரிவித்தோர்க்கும்,
- மற்றும் பல வழிகளிலும் வேண்டிய உதவிகள் நல்கிய அனைவருக்கும்,
- அந்தியேட்டி - வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும்

**எமது மனமார்ந்த நன்றியினைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.**

இங்ஙனம்
- குடும்பத்தினர்

இல. 309, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
21-05-2006.

# ஸ்ரீ கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்."



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர் - ☎ 2223588